இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,598 — DECEMBER 19, 1913.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Resolution relating to Public Bathing, and Washing of Cattle and Clothes, passed by the Local Board of Anuradhapura.]

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்க கட்டளைசட்டத்தை திவிர்த்திசெய்த 1901 ம் ஆண்டின் 2 ம் கட்டளைச்சட்டத்தோடணைத்திருக்கும் 8 ம் அதிகாரத்தின் முதலாம் இணைப்பிரமாணத்தின்படி, 1913 ம் ஆண்டு ஐப்பசிமீ 6 ந் திகதி கூடிய நகரசங்கத்தின் 5 ம் தீர்மானம் தீர்மானிக்கப்பட்டது: அனுராசபுர நகரசங்கத்தின் எல்லைக்குள் பின்வருமிடங்கள் சனங்கள் குளிப்பு முழுக்கு முதலிய செய்வதற்கும், வஸ்திரம், மாடு, கழுவுவதற்கும் பாவிக்கப்படும்.

1.—குளிப்பு முழுக்கு.

(a) தாமரைப் பொக்கணைக்குக் கிட்டவிருக்கும் குழிக்கும் பொக்கணை.
(b) மல்வத்தை ஓயா.
(c) பசுவாக்குளம்.
(d) நுவரைவெவ.
(e) இரண்டு ஈசுரமுனிப்பொக்கணைகள்.
(f) வெஸ்சகிரிப்பொக்கணை.
(g) சங்கத்தான் பொக்கணை.

2.—மாடு குதிரை முதலியன கழுவுவதற்கு.

(a) மிருந்தலை ரோட்டுப் பாலத்திற்கும் டிக்சன் ரோட்டுப் பாலத்திற்கும் இடையேயிருக்கும் ஆற்றுயிடத்தைவிட மல்வத்தைஓயா.
(b) உண்ணுன்சே வெட்டித்த பொக்கணை.

3.—சீலை கழுவுவதற்கு.

(a) வண்ணன் பொக்கணை.
(b) மல்வத்தை ஓயாவில் புத்தளம் திருக்கோணமலை ரோட்டுப் பாலத்திற்குக்கீளே.
(c) வைரோட்டுக்குக்கிட்ட பசுவாக்குளத்திற்குக்கீளேயுள்ள பொக்கணை.

அனுராசபுர லோக்கல் போட் கந்தோர்,
1913 ம் ஆு டிசம்பர்மீ 11 ந் உ.

என். இசட்,
லோக்கல் போட் அக்கிராசனருக்காக.

---

[By-laws relating to Dairymen supplying Milk within the Local Board Limits of Anuradhapura.]

1898 ம் ஆண்டு 13 ம் இலக்க நகரசங்கச் சட்டத்தின் (21 ம்) 56 ம் பிரிவின் 5 ம் கீழ்ப்பிரிவினுக்கமைய அனுராசபுர நகிரசங்கத்தாரால் ஆக்கப்பட்ட பின்வரும் பிரமாணங்கள் தேசாதிபதிக்கு அனுப்பப்பட்டு மந்திராலோசனைச் சங்கத்தவரால் அங்கீகரிக்கப்பட்டு சகலரு மறியும்படி பிரசுரஞ்செய்யப்படுகின்றன.

உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1913 ம் ஆண்டு டிசெம்பர்மீ 13 ந் உ.

ஆர். ஈ. ஸ்டப்ஸ்,
இராசாங்க லிகிதர்.

குறித்த இணைப்பிரமாணங்களாவது.

1. நகரசங்க எல்லைகளுக்குள் பால் விக்கும் ஒவ்வொரு சாலைக்காரனும் தங்கள் பெயரையும் விலாசத்தையும் நகரசங்கக் கந்தோரில் பதிவிக்கவேண்டும்; அப்படிப் பதிவுசெய்யாது பால் விக்கும் அல்லது பால் விலைக்கு விற்பதற்கு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் குற்றத்திற்குட்படுவார்கள்.

2. நரகல்குளி அல்லது கக்கூசு இருக்கும் இடத்திலிருந்து 50 அடிக்குள் அல்லது நரகல் குளியிலிருந்தாவது கக்கூசுகளிலிருந்தாவது கெட்ட நாற்றம் தட்டக்கூடிய விடத்தில் பால்சாலை வைத்திருக்கக்கூடாது.

3. பால்சாலை வைத்திருக்கும் ஒவ்வொரு வளவும் நகரசங்கத்தாரின் தலைவரின் திருப்திப்படி கான் கட்டியிருத்தல் வேண்டும். அக்கான்கள் கழுவிச் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். ஊத்தைத் தண்ணீர் பால்சாலை வைத்திருக்கும் எந்த வளவிலும் விட்டிருக்கப்படாது.

4. பால்சாலைக்குக் கிட்டவிருக்கும் எல்லாக் குப்பை கூளம் அழுக்கு யாவும் எடுத்துப்போட வேண்டும். நாள்தோறும் மாட்டுக் கொட்டிலும் பால் சாலையிலும் இருக்கும் சாணிகள் அள்ளிப்போட வேண்டும்.

5. வசதியான தூரத்தில் சுத்தமான தண்ணீர் இருக்கவேண்டும். பால் சாலை வைத்திருக்கும் வளவிலிருக்கும் கிணறுகளில் முழுக அல்லது சீலை தோய்க்கக்கூடாது.

6. பால் சாலையிலிருக்கும் கட்டிடம் ஆட்கள் வசிக்க வல்லது யாதாமொரு பாவனைக்கும் பாவிக்கக்கூடாது. அப்படிப்பட்ட கட்டிடம் எல்லா நேரங்களிலும் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும்.

7. பால்மாடு யாதாமொரு வருத்தத்திற்கு முட்பட்டதாயிருக்கக்கூடாது. பால் சாலைக்காரர் யாபேரும் தொற்றுயல்லது பரம்புதற்குயேதுவான வியாதகனல்லாதவர்களாயிருக்க வேண்டும்.

8. பால் சாலைக்குச்சேர்ந்த கருவிகள் அல்லது தட்டுமுட்டுச் சாமான்கள் யாவும் சுத்தமாயிருத்தல் வேண்டும்.

9. பால் வெளியே கொண்டுபோகும் இயந்துகள் யாவும் வடிவாய் ஊருத் சாமான்களால் அடைத்து அல்லது மூடியிருக்க வேண்டும். பால் கமக்கட்டுக்குள் கொண்டுபோகக்கூடாது.

10. தண்ணீர் அல்லது ஏதேன் வேறு பதார்த்தத்தால் கலக்கப்பட்ட பால் விற்க அல்லது விலைக்கு விற்கவைப்பது நியாயப்பிரமாணத்திற்கு விருது.

11. வெண்ணெய்யெடுத்த பாலென்று வேண்டுவோர்க்கு முதலறிவியா்து யாதாமொருவரும் வெண்ணெய்யெடுத்த பால் விற்க அல்லது வேண்டுவதற்கு வைக்கப்படாது.

12. நகரசங்கத்திற்குச்சேர்ந்த அரசாட்சியாரின் வையித்தியர் அல்லது அவரின் உதவி வையித்தியர் அல்லது நகரசங்கத்தின் இன்ஸ்பக்டர் பரிசோதனை செய்வதற்கு பால் விற்கும் எந்த ஆட்களிலிருந்தாவது அல்லது பால் சாலைகளிலிருந்தாவது பால்கள் எடுக்கலாம். அப்படிக் கொடுக்க யல்லத்தட்டுவோர் குற்றத்திற்குள்ளாவார்கள்.

13. பரிசோதனைசெய்த பால் தண்ணீர் விட்டதாய்க் கண்டுபிடித்தால், அப்பாலுடைய பால்சாலைக்காரன் அல்லது வேலைக்காரன் குற்றத்திற்குட்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

14. இந்தப் பிரமாணங்களில் ஒன்றையாவது தவறினால் பால் விற்கும்படி செய்த பதிவை நகரசங்கத்தார்ரவர்கள் நீக்கிக்கொள்ளுவார்கள்.

---

[By-laws relating to Bakeries made by the Local Board of Batticaloa.]

1. ஸ்தான சங்க அக்கிராசனரிலிருந்து உத்தரவுப்பத்திரம் பெறுமல் ஒருவரும் கோதுமைஅப்பம் சுடுமிடம் வைத்திருக்கப்படாது.

2. (*a*) புளித்த மாவை பிசைகிறதற்காக வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும், அல்லது மாவை ஆயத்தம்பண்ணும் ஒவ்வொரு அறையும், (*b*) அப்பம் சுடுகிறதற்காக வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் அல்லது இரண்டத்தொரு பாவினைக்காக பாவிக்கப்படும் ஒவ்வொரு அறையும் காற்று வெளிச்சம் முதலியவை நன்ருய் விளக்கூடியதாயும் சுவர்கள் சீமேந்தினுல் பூசப்பட்டும் நிலங்கள் முழுதும் சீமேந்து போடப்பட்டும் போதிய கான்கள் கட்டப்பட்டும் இருத்தல்வேண்டும். அக்கிராசனரால் கட்டளையிடப்படும் பொழுது அறையின் முகட்டிற்கு பலகைமேற்கட்டி அடிக்கப்படவேண்டும்.

3. குளிக்கக்கூசு, கக்கூசு, அல்லது வெளியான தண்ணீர் ஓடும் குளிகள் இவைகளிலிருந்து 30 அடி தூரத்திற்குள் யாதொரு கோதுமைஅப்பம் சுடுமிடம் அல்லது கோதுமைஅப்பம் விற்குமிடம் இருக்கப்படாது.

4. (*a*) புளித்த மாவைப் பிசைகிறதற்காகவும் அல்லது மாவை ஆயத்தம்பண்ணுகிறதற்காகவும், (*b*) அப்பம் சுடுகிறதற்காகவும் அல்லது இரண்டத்தொரு பாவினைக்காக பாவிக்கப்படும் அறை மேற்கூறிய பாவினைக்காக பாவிக்கப்படுகிறதேயன்றி குடியிருக்கும் வீடாக அல்லது வேறு ஏதும் முகாந்தரமாய்ப் பாவிக்கப்படாது.

5. அப்பம் சுடுமிடத்திலுள்ள அல்லது அதற்குச்சேர்ந்த அல்லது அப்பம் விற்குமிடத்திற்குச்சேர்ந்த பாண்டங்கள், தளபாடங்கள், மற்றும் கருவிகளெல்லாம் அதிக சுத்தமாய் வைக்கப்பட்டிருத்தல்வேண்டும். மேசையின் மேற்தட்டு துவாரங்கள் அல்லது வெடிப்புகள் இல்லாததும் ஒன்ருடொன்று மருவியிருக்கும் பலகைகளால் செய்யப்பட்டிருத்தல்வேண்டும்.

6. அப்பம் சுடுமிடங்களில் அல்லது அவ்விடத்தைச்சார்ந்து அல்லது அப்பம் விற்கும் இடங்களில் அல்லது அவ்விடத்தைச்சார்ந்து இருக்கும் குப்பை அழுக்கு முதலியவைகளெல்லாம் தாமதமின்றிப் பெருக்கித்தள்ளப்படவேண்டும். வாய்க்கால்களெல்லாம் நன்ருய்க் கழுவப்படவேண்டும்.

7. விற்கவைத்திருக்கும் கோதுமைஅப்பம், பலகாரம், இனிப்புப்பண்டங்களெல்லாம் இலையான்கள் போகாதபடி தடைசெய்யக்கூடியதாய்ச் செய்யப்பட்ட கண்ணுடிப் பெட்டிகளுக்குள் வைத்திருத்தல்வேண்டும். கண்ணுடிப் பெட்டிகள் அதிக துப்பரவாக வைக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

8. அப்பம் சுடுமிடங்களில் அல்லது விற்குமிடங்களில் தோலிலிருக்கும் புண் நோயாளராவது அல்லது தொற்று நோயாளராவது அப்படி நோயாளரைச் சிறிது நேரத்திற்குமுன் பார்த்துப் பராமரித்தவராவது அல்லது வேறு எவ்வித அசுத்தர்களாவது வேலைசெய்யாதிருத்தல்வேண்டும்.

9. கோதுமை மா பிசைகிறவர்கள் அப்பம் சுடுகிறவர்கள் எல்லாரும் மார்பையும் உடம்பையும் மூடி வெள்ளை முன்தாங்கி அணிந்திருத்தல்வேண்டும்.

10. கோதுமைஅப்பம் சுடுமிடங்கள் அல்லது கோதுமைஅப்பம் விற்குமிடங்கள் ஸ்தான சங்க இன்ஸ்பெக்டர், சுப்பர்வைசர் அல்லது அக்கிராசனரால் எழுத்து மூலமாக தத்துவம்பெற்றவர்கள் எந்நேரத்திலும் அவ்விடங்களில் ஓர் ஆள் இருக்குமாகில் உட்புகுந்து பரிசோதனைசெய்ய உத்தரவுள்ளவர்களாயிருப்பார்கள்.

11. கோதுமைஅப்பம் சுடும் ஒவ்வொரு இடத்திலும் இத்துணைச்சட்டங்கள் இங்கிலிசிலும் சிங்களத்திலும் தமிழிலும் பிரசித்தமாய்த் தூக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

உத்தமனூர் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1913 ம் ஞு டிசெம்பர்மீ 13 ந உ.

ஆர். ஈ. ஸ்றபஸ்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

---

## LAND SALES.

காணி விற்பனவுகள்.

**No. 1,357, E. P.**—1914 ம் ஆண்டு தைமாதம் 21 ந் திகதி, புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு, கிழக்கு மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,553. ஏருவூர்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. றூ. ப. | | | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1854 | மைலம்பாவெளி.. | மீ. ஐதுருசு | .. தென்னைக்கேற்றகாடு | 2 | 0 | 2 | .. 18 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 1855 | மைலம்பாவெளி .. | பொதுவிற்பனவு .. | தென்னைக்கேற்றகாடு | 1 2 37 .. | 17·50 |
| 1856 | ஷை .. | ஆ. கந்தனு மறுபேரும் .. | தென்னந்தோட்டம் | 0 2 33 .. | 15 |
| 1857 | ஷை .. | மீ. ஐதுருசு .. | ஷை .. | 0 1 30 .. | 158 |
| உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1858 | ஷை .. | தென்னை நாட்டப்பட்ட விலக்கப்பட்ட நிலம் .. | தென்னந்தோட்டம் | 0 2 0 .. | 86 |
| உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 1859 | ஷை .. | சிந்தர் .. | தென்னந்தோட்டம் | 2 0 12 .. | 15 |
| 1860 | ஷை .. | சிந்தர், தென்னை நாட்டப்பட்ட விலக்கப்பட்ட நிலம் .. | ஷை .. | 0 1 23 .. | 97 |
| உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1861 | ஷை .. | பொதுவிற்பனவு .. | தென்னைக்கேற்றகாடு | 4 1 26 .. | 16 |
| 1862 | ஷை .. | வழிக்காக விலக்கப்பட்ட நிலம் | ஷை .. | 1 0 7 .. | — |
| உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 1863 | வேடகுடியிருப்பு .. | சிந்தர் .. | தென்னந்தோட்டம் | 0 0 32 .. | 35 |
| படம் 4,578. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1995 | நாசுவன்தீவு .. | சி. ப. சின்னத்தம்பி .. | தென்னைக்கேற்றகாடு | 1 3 30 .. | 22 |
| படம் 4,574. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1948 | வாகைநதி .. | நீரூற்றுக்காக விலக்கப்பட்ட நிலம் .. | காடு .. | 0 1 35 .. | — |
| 1949 | ஷை .. | ஆ. தம்பிசாய்வு .. | காடு .. | 0 3 12 .. | 22 |
| படம் 4,611. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 2150 | புல்லாவி .. | க. பொ. த. சின்னத்தம்பி .. | தென்னைக்கேற்றகாடு | 3 0 15 .. | 23·50 |
| 2151 | ஷை .. | கடலுக்காக விலக்கப்பட்ட நிலம் | ஷை .. | 1 1 25 .. | — |
| படம் 4,560. மண்முனைப்பற்று வடபகுதி. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1905 | பாலமுனை .. | சா. லுக்குமாலெவ்வை .. | தென்னைக்கேற்றகாடு | 3 0 37 .. | 25 |
| படம் 4,562. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1911 | கோவில்குளம் .. | பொதுவிற்பனவு .. | தென்னைக்கேற்ற பறட்டைக்காடு .. | 1 3 36 .. | 15 |
| 1912 | ஷை .. | ஷை .. | ஷை .. | 2 1 29 .. | 15 |
| 1913 | ஷை .. | ஷை .. | ஷை .. | 1 0 8 .. | 15 |
| 1917 | ஷை .. | ஷை .. | தென்னைக்கேற்ற வெட்டைப்பூமி .. | 0 1 35 .. | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் விஞவியறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1913 ம் ஞு டிசெம்பர்மீ 10 ந் உ.

ஆர். இ. ஸ்டப்ஸ்,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

**No. 1,358, E. P.**—1914 ம் ஆண்டு தைமாதம் 29 ந் திகதி, வியாழக்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு, கிழக்கு மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்கள், தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருககும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்பார். காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 4,621. கோறளைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம், ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2212 | கிரான் .. | க. நீலன் .. | தென்னைக்கேற்றகாடு | 1 2 9 .. | 22·50 |
| உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 2213 | ஷை .. | க. சம்புனாதன் .. | தென்னந்தோட்டம் | 0 1 36 .. | 262 |
| உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 2214 | ஷை .. | பொதுவிற்பனவு .. | சதுப்புநிலம் .. | 0 2 12 .. | 20 |
| படம் 4,498. மண்முனைப்பற்று தென்பகுதி. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 1595 | அம்பிளாந்துறை .. | ஆ. அ. மீராசாய்வு .. | வேளாண்மைப்பூமியும் வெட்டையும் .. | 1 3 28 .. | 20 |
| 1597 | ஷை .. | பொ. த. கதிராமப்போடியு மறுபேரும் .. | ஷை .. | 4 0 27 .. | 20 |
| 1598 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 1 27 .. | 20 |
| உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 1599 | ஷை .. | பொதுவிற்பனவு .. | ஷை .. | 3 0·35 .. | 20 |
| உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | | | |
| 1600 | ஷை .. | வீ. சின்னவப்போடியு மறுபேரும் | ஷை .. | 2 0 15 .. | 20 |
| 1601 | ஷை .. | ஆ. அ. மீராசாய்வு மறுபேரும் .. | ஷை .. | 1 3 20 .. | 20 |
| படம் 4,293. உரித்தாளி—முடிக்குரிய. | | | | | |
| 718 | மகிளடித்தீவு .. | ஆ. இசுமாலெவ்வை .. | வேளாண்மையும் பறட்டைக்காடும் .. | 0 2 32 .. | 20 |
| 720 | ஷை .. | க. பெரியதம்பி .. | மணல் .. | 0 3 27 .. | 15 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | படம் 4,475. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 1472 | — | இ. அகமதுலெவ்வை | வெட்டைப்பூமி | 2 1 20 | 25 |
| 1474 | ஷை | ஷை | ஷை | 1 0 21 | 25 |
| 1476 | ஷை | இ. பைக்கீர்தம்பி | வேளாண்மைக்கேற்ற வெட்டைப்பூமி | 3 1 20 | 20 |
| | | படம் 4,547. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 1824 | கொக்கட்டிச்சோலை | அ. செம்பாப்போடி | வயல் | 0 2 16 | 25 |
| | | படம் 4,537. போரதீவுப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 1770 | மண்டூர் | சி. பொ. த. சின்னப்புவு மறுபேரும் | காடு | 12 2 19 | 15 |
| 1771 | ஷை | ஷை | காடு | 1 0 20 | 15 |
| | | படம் 4,537. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 2078 | வெல்லங்கிரி | சி. வ. கணவதிப்பிள்ளை | வேளாண்மைக்கேற்ற தளைக்காடு | 10 0 15 | 20 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்தீசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் விஞவியறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1913 ம் ஹூ டிசெம்பர்மீ 18 ந் உ.

ஆர். ஈ. ஸ்டப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

[Reduction of Upset Price of Lot No. 1243, P. P. 4,110, Land Sale No. 1,893, N.C. P., published in *Gazette* of November 28, 1913.]

தம்பன்கடவை டிஸ்திறிக் காணி விற்பனவு:

1913 ம் ஹூ கார்த்திகைமாதம் 28 ந் திகதி 6,594 ம் இலக்க "கவுண்மேந்து கசெற்" றில் வடமத்திய மாகாணம் 1914 ம் ஹூ தைமாதம் 9 ந் திகதி 1,893 ம் இலக்கம்கொண்ட நொத்தீசில் விளம்பரம் செய்திருக்கிறபடி 4,110 ம் இலக்கம்கொண்ட பிளானில் 1243 ம் கண்டத்தின் தரிப்புவிலை ரூபாய் 95 ஆக இருந்ததை இப்போ ரூபாய் 50 ஆகக் குறைக்கப்பட்டிருப்பதை இத்தால் எல்லாருக்கும் அறிவிக்கிறேன்.

அனுராசபுரக் கச்சேரி,
1913 ம் ஹூ மார்கழிமீ 6 ந் உ.

பி. கொன்ஸ்றன்றயின்,
வடமத்திய மாகாண ஏசன்றுத்துரை.

---

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Uraliya, Puttalam District.]

**1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம்** பாதை திருப்புவதற்கு என்னும் பகிரங்க **தேவைக்கு வேண்டியதான** பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4,039. குறிச்சி—உறளிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| A 41 | உறளியத்தோட்டம் | தென்னஞ்செய்கை | வெவன்துரை | 0 1 2·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஏப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1914 ம் ஹூ மாசிமீ 13 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு சலாபத்துக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1913 ம் ஹூ மார்கழிமீ 12 ந் உ.

ஜோன் ஸ்கொட்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Ganegama, Galle District.]

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்பாதொட்டை துறைக்கு வழியொன்றுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 9,916. குறிச்சி—கனேகமை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| V 17 | தொட்டலியத்தைவத்தை | தென்னங்காணி | ஏ. டி. சில்வா ஆதிகெட்டி, கனேகம | 0 0 13 |
| W 17 | தம்பேககலியத்தைவத்தை | ஷை | டி. ஏ. எதிரிசிங்கவும் சிலரும், கனேகம | 0 0 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஏப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1914 ம் ஹூ ஜனவரிமாசம் 12 ந் தேதியிலன்று பின்னேரம் 2·30 மணிக்கு பத்தைகாமத்து தானையத்தில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1913 ம் ஹூ டிசெம்பர்மீ 12 ந் உ.

ஆர். பி. எலிங்ஸ்,
அரசாட்சி ஏசண்டு.

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தலகளைக் குறித்த விளம்பரங்கள்.

[Uva Notice No. 5,071.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1913 ம் ஹூ (டிசம்பர்) மார்கழிமீ 19 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விபரம்.

ஊவா மாகாணம் புத்தளப்பிரிவைச்சேர்ந்த கந்துகரகோறளையில் அனுபொத்த என்னும் பட்டணத்திலுள்ள. இத்துடனணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 223.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1½ | அறலுகாகேன | 0 1 33 |

எல்லைகளாவன: வடக்கு-144,954, 144,955 ம் உரிமைப்படங்களில் காணும் காணிகள்; கிழக்கு-ஓசிலகிவுல ஆறு (வாசிப்போனேக் கிராம எல்லை), பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட சொகொம்பொல பதன; தெற்கு-ஓர் அகழி, 185,989 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; மேற்கு-144,956 ம் உரிமைப்படத்தில் காணும் காணி.

II.—பிரதம படம் 223.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 18 | லிந்தகாவகேன | 0 1 13 |
| 20A | கெவென்அருவபதன | 0 0 27 |
| | | 0 2 0 |

எல்லைகளாவன: வடக்கு-144,950 ம் உரிமைப்படத்தில் காணும் காணி; கிழக்கு-உ. ம. அப்துல்காதீம் உரித்தாடும் கடாதெகிவத்த; தெற்கு-முடிக்குரிய ஜன்பறங்கிவத்த, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட பங்கலாவபதன, முடியால் விற்கப்பட்ட அற்றிக்கவத்த; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கவெனருவபதன.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 1821—1822 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.
[Uva S. O. 90, 1912—1913.]

---

[Uva Notice No. 5,092.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1913 ம் ஹூ (டிசெம்பர்) மார்கழிமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே வதுளைக் கச்சேரியில் ஊவா மாகாண அரசாட்சி ஏசென்று அவர்கள முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலத்தைப்பற்றிய சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எவ். வாட்லெற்,
ஊவா அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணியின் விவரம்.

வீ. எல். பிரதம படம் 74 லினும் இதற்கு அணைக்கப்பட்ட *படத்திலும் 41 ம் துண்டாகக் காணப்படும் 1 றூட் 4 பேர்ச்சுள்ள கான்நிலம். இது ஊவா மாகாணத்தின் உடுகின்டப்பிரிவில் டம்பவின்னைக் கோறளையிலுள்ள கிங்குறு கமுவக் குறிச்சியிலுள்ளது. எல்லைகளாவன: வடக்கு-134,559 ம் ஆட்சிப்படத்திற் சொல்லப்பட்ட சால்லுவாலும் மற்றவர்களாலும் உரித்தாடப்படும் தெருவன்கலகொடகேனே; கிழக்கு-134,559 ம் ஆட்சிப்படத்திற் சொல்லப்பட்ட நிலமும், முடிக்குரிய நாரன்கண்டுறை பத்தானயயவும்; தெற்கு-134,559 ம் ஆட்சிப்படத்திற் சொல்லப்பட்ட நிலம்; மேற்கு-134,559 ம் ஆட்சிப்படத்திற் சொல்லப்பட்ட நிலம்.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 1822 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்க.

---

### Notice under "The Excise Ordinance, No. 8 of 1912."

1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க கள்ளு சாராய கட்டளைச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

[Closing of Foreign Liquor Taverns, and Refreshment Rooms, Kandy District.]

பிறதேசத்துக் குடிவகை விற்குந் தவறணைகளையும் தீன் கடைகளையும் நீக்குதலைப்பற்றிய அறிவித்தல்.

இதனடியிற் காணும் அட்டவணையிற் குறிக்கப்பட்டிருக்கும் பிறதேசக் குடிவகை தவறணைகளையும் தீன் கடைகளையும் 1914 ம் ஹூ ஐப்பசிமீ 1 ந் திகதி தொடக்கம் நீக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இந்தத் தவறணைகள் நீக்குதலைப்பற்றி 1914 ஹூ மாசிமீ 13 ந் திகதிவரைக்கும் எழுத்து மூலத்தில் யாதாயினும் விண்ணப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளுவேன். மேலும், அத்திகதியில் கண்டிக்கச்சேரியில் 12 மணிக்கும் 4 மணிக்குமிடையில் எனக்குச்செய்யும் யாதாயினும் வாக்குமூல விண்ணப்பத்தையும் நான் ஏற்றுக்கொள்வேன்.

கண்டிக் கச்சேரி,
1913 ம் ஹூ மார்கழிமீ 15 ந் உ.

ஜீ. எஸ். செக்ஸ்டன்,
அரசாட்சி ஏஜன்று.

அட்டவணை.

1. கண்டி இல்ஸ்றீற்றில் 3 ம் 4 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் எஸ். வ. வ. ரீ. டீ மெல்.

2 கண்டி இல்ஸ்றீற்றில் 3 ம் 4 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தீன்கடை உத்தரவுபெற்றவர் எஸ். வ. வ. ரீ. டீ மெல்.

3. கண்டி கொழும்பு ஸ்றீற்றில் 38 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் டீ. வ. பெறேரு.

4. கண்டி கொழும்பு ஸ்றீற்றில் 38 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தீன்கடை உத்தரவுபெற்றவர் டீ. வ. பெறேரு.

5. கண்டி கொழும்பு ஸ்றீற்றில் 248 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் ஜீ. மிஸ்சியர்.

6. கண்டி கொழும்பு ஸ்றீற்றில் 248 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தீன்கடை உத்தரவுபெற்றவர் ஜீ. மிஸ்சியர்.

7. கண்டி பேராதனை ரோட்டில் 12 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தீன்கடை உத்தரவுபெற்றவர் எம். வ.. புருணாந்து.

8. கண்டி காசிள்கில் ஸ்றீற்றில் 29 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் ஜானிஸ் சேனநாயக்க.

9. கண்டி காசிள்கில் ஸ்றீற்றில் 29 ம் இலக்கத்தில் இப்போ இருக்கும் தீன்கடை உத்தரவுபெற்றவர் ஜானிஸ் சேனநாயக்க.

10. கண்டி திருக்கோணமலை ரோட்டில் 36A ம், 37 ம் இலக்கங்களில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் சி. எவ். புருணாந்து.

---

[Tenders for provisioning Hospitals, Ingiriya, Tissamaharama, &c.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு கொந்திருத்து ஒப்பந்தம் அங்கீகரிக்கப்படும் திகதி தொடக்கம் 1915 ம் ஆண்டு புரட்டாசிமீ 30 ந் தேதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தகேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஆசுபத்திரிக்கு சாப்பாட்டுச்சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1914 ம் ௵ தைமீ 6 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள்செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்கவலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுகொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு, 1913 ம் ஆண்டு மார்கழிமீ 10 ந் உ.

(கையொப்பம்) ஜீ. ஜே. றதர்வட்,
பதிற் பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர்.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | | முற்பணத்தின் தொகை ரூ. | | பணப்பிணையின் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| இங்கிரீயா ஆசுப்பத்திரி | .. | சமையல் செய்யப்பட்ட ஆகாரங்களும் பாலும் | | 100 | .. | 200 |
| திசமகாரும ஆசுப்பத்திரி | .. | ஷை .. | .. | 100 | .. | 200 |
| தலைமன்னார் ஆசுப்பத்திரி | .. | ஷை .. | .. | 100 | .. | 200 |
| உண்டுகொடை ஆசுப்பத்திரி | .. | ஷை .. | .. | 100 | .. | 200 |

[Tenders for Lease of Beef and Mutton Markets, Anuradhapura.]

1914 ம் ஆண்டுக்கு அநுராசபுர மாட்டிறச்சி ஆட்டிறச்சிக்கடைக் குத்தகை கேட்கும் முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1913 ம் ஆண்டு மார்கழிமாசம் 22 ந் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணி வரையிலும் அநுராசபுர நகரசங்கத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். மாட்டிறச்சிக்கும் ஆட்டிறச்சிக்கும் பிறம்பான கேள்விப்பத்திரங்கள் அனுப்ப வேண்டும்.

2. ஒவ்வொரு கேள்விக்காறனும் நூறு ரூபாய் பிணை கட்டவேண்டும். அல்லாவிட்டால் அவரினது கேள்விப் பத்திரம் கவனிக்கப்படமாட்டாது.

3. கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்வதும் அல்லது தள்ளிவிடுவதும் நகரசங்கத்தாருடைய எண்ணத்திற்கு அமையப்பட்டிருக்கின்றது.

4. இதைப்பற்றிய விபரங்களை லோக்கல் போட் ஆபீசில் கேட்டறிந்துகொள்ளலாம்.

பி. கொன்ஸ்றன்றயின்,
அக்கிராசனர்.

லோக்கல் போட் ஆபீஸ்,
1913 ம் ஆண்டு மார்கழிமீ 6 ந் உ.

[Supreme Court Criminal Sessions for Chilaw and Puttalam at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் சிலாபம் புத்தளம் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1914 ம் ஆண்டு தைமாதம் 12 ந் திகதியாகிய திங்கக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
எஸ். டீ. சமறசிங்க,
வடமேற்கு மாகாணத்து பிஸ்காலுக்காக.

குருணாகல் பிஸ்கால் கந்தோர்,
1913ம் ஞூ மார்கழிமீ 10 ந் உ.

## UNOFFICIAL ANNOUNCEMENT.

தொழிலுக் குட்படாதவரின் அறிவித்தல்.

[U. Samarawickrama.]

மாத்துறை கடைவத்தையைச்சேர்ந்த கொடாமத்தில் குடியிருக்கும் உபேரிஸ் ஸமறவிக்கிறம யென்ற நான், 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்க சட்டத்தின் 1 ம் B என்னும் செடுலில் இரண்டாம் பிரமாணப்படி இன்று முதல் மூன்று மாதத்தின்பின் மாத்துறை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் உத்தியோகம் பார்க்க என்னை நியமிக்கும்படி பதிவுகாரத் தலைவருக்கு விண்ணப்பம்பண்ணுவேனென்று இத்தா லறிவிக்கிறேன்.

உ. சமறவிக்கிறம.

மாத்துறை கொடாமத்தில்,
1913 ம் ஆண்டு மார்கழிமீ 5 ந் உ.

[D. G. J. Gunasekara.]

மாத்துறைக் கடைவீதியில் குடியிருக்கும் தம்பல்லேகம ஆச்சிகே ஜேமிஸ் குணசேகறவாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச்சட்டத்தின் 1 B என்னும் செடுலின் இரண்டாம் பிரிவின்படி இன்றுமுதல் மூன்று மாதத்தின்பின் மாத்துறை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் உத்தியோகம்பார்க்க என்னை நியமிக்கும்படி பதிவுகாரத் தலைவருக்கு விண்ணப்பம்பண்ணுவேனென்று இத்தா லறிவிக்கிறேன்.

டீ. ஜீ. ஜே. குணசேகற.

மாத்துறை கடைவீதியில்,
1913 ம் ஞூ டிசெம்பர்மீ 11 ந் உ.

[J. E. de Saram.]

கொழும்பு டிஸ்திறிக்கைச்சேர்ந்த சல்பிட்டிகோறளை பள்ளேபத்து வெலிகடை சேர்ன் யெட்மன் ட சேரம் ஆகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் நிம்பர் கட்டளைச்சட்டத்தின் 1-B என்னும் செடுலின் 2 ம் பிரிவின்படி கொழும்பு டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்ஆக வேலைபார்ப்பதற்கு இன்றுமுதல் மூன்று மாதத்தின்பின் பதிவு கந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

ஜே. யீ. ட சேரம்.

வெலிகடை, 1913 ம் ஞூ டிசெம்பர்மீ 17 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.